# THE COVAI MAIL

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

Coimbatore | Chennai | Tiruppur | Ooty | Coonoor | Kotagiri | Pollachi | Palani

Vol No. : 10 Issue No. : 18 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, July 30 - Aug 5, 2023, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-



Sree Annapoorna Sree Gowrishankar
The pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்டரிங்



KARPAGAM COLLEGE OF ENGINEERING
Rediscover | Refine | Redefine
Accredited by NAAC with 'A+' grade
Autonomous | Affiliated to Anna University
(An ISO 9001:2015 and ISO 14001:2015 Certified Institution)

KARPAGAM INSTITUTE OF TECHNOLOGY
Inspiring Innovation
Approved by AICTE and Affiliated to Anna University
Accredited by NBA (CSE, IT, ECE)
(An ISO 9001:2015 and ISO 14001:2015 Certified Institution)

COUNSELLING CODE 2710

REACH OUT TO YOUR DREAMS THROUGH KARPAGAM

COUNSELLING CODE 2735

KARPAGAM COLLEGE OF ENGINEERING
(Autonomous) (Accredited by NAAC A+) (Accredited by NBA - ECE, EEE, IT and MECH)
(Approved by AICTE, Affiliated to Anna University)

UG Programmes
- B.E. Civil Engineering
- B.E. Computer Science and Engineering
- B.E. Computer Science and Engineering (CyberSecurity)
- B.E. Computer Science and Design
- B.E. Computer Science and Technology
- B.E. Electronics and Communication Engineering*
- B.E. Electrical and Electronics Engineering*
- B.E. Electronics and Telecommunication Engineering
- B.E. Mechanical Engineering*
- B.Tech. Artificial Intelligence and Data Science
- B.Tech. Information Technology*

*Accredited by NBA

PG Programmes
- MBA
- MCA
- M.E. Communication Systems
- M.E. VLSI Design
- M.E. Mechatronics

www.kce.ac.in

KARPAGAM INSTITUTE OF TECHNOLOGY
(Approved by AICTE, Affiliated to Anna University) (Accredited by NBA - CSE, IT, ECE)

UG Programmes
- B.E. Computer Science and Engineering*
- B.E. Electrical and Electronics Engineering
- B.E. Electronics and Communication Engineering*
- B.E. Mechanical Engineering
- B.Tech. Artificial Intelligence and Data Science
- B.Tech. Information Technology*

*NBA Accredited

BUS FACILITY AVAILABLE FROM
COIMBATORE
AVINASHI | POLLACHI
METTUPALAYAM | SOMANUR
PALLADAM | TIRUPUR
PALAKKAD | UDUMALPET

www.karpagamtech.ac.in

CENTER OF EXCELLENCE
IBM | ORACLE | Texas Instruments | vmware
DSAC | Red Hat | LabVIEW | KCE-COEA

THE KIT EDGE
E-Yantra | Institution's Innovation Council (IIC) | Texas Innovation Lab | NITTR, NPTEL IIT Spoken Tutorial | VIRTUAL LABS with NITK, SURATHKAL
IIRS - ISRO Nodal Centre | KIT - STARTUP ACCELERATOR -Intellibyte Systems -Eco - Run | KIT-GIT HUB FOSS Learning Hub | AWS - EDUCATE (Build Future in AWS cloud)

COMPANIES OF THE YEAR - 2022 - 2023
tcs, zoho, cognizant, accenture, Infosys, wipro, TATA ELXSI, Tech Mahindra, AVASOFT, MOONRAFT, mr. cooper, vuram, Informatica, Rently, DUZEN, ECON, urjanet, fractal, virtusa, HEXAWARE, quinbay, CODINGMART, odessa, ASHOK LEYLAND, prompt cloud, propel, purpleslate, Clarium, iLink Digital, grootan, multicoreware, ElectroSolve, HIROTEC, MALLOW, KIN LONG, Mindtree, ALPHA TEC, aspire, SACRA, senseforth.ai, sopra steria, ValueLabs, C.R.I. PUMPS, intellect, VDart, DONGWOO, Cloud Assert, DOITER, Stanadyne

KARPAGAM COLLEGE OF ENGINEERING
Myleripalayam, Othakkalmandapam Post, Coimbatore - 641 032, Tamil Nadu
Email: info@karpagam.com | www.kce.ac.in

KARPAGAM INSTITUTE OF TECHNOLOGY
SF No. 247, 248 L&T By Pass Road, Eachanari Post, Coimbatore - 641 105, Tamil Nadu
Email: info@karpagam.com | www.karpagamtech.ac.in

Mobile: 82203 33850, 82203 33750, 78457 22799, 82203 33620 | Pollachi Main Road, Eachanari Post, Coimbatore - 641021

# நனவாகுமா ராமதாஸ் கனவு?



✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

தனது பிறந்தநாளையொட்டி பாமக தொண்டர்களுக்கு ராமதாஸ் எழுதிய உருக்கமான கடிதத்தில் பாமக, வன்னியர் சங்கம் உருவான வரலாறு, தமிழகத்துக்கு பாமக செய்துள்ள சமூக, அரசியல் பணிகள் உள்ளிட்டவற்றை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதத்தில், பொதுவாழ்வுப் பயணத்தில் அரசியல், சமூக நீதி, இனம், மொழி, இயற்கை, சுற்றுச்சூழல் சார்ந்து என்னென்ன இலக்குகளையெல்லாம் நான் வரித்துக் கொண்டேனோ, அந்த இலக்குகளை எனது 44 ஆண்டுகால பொது வாழ்க்கையில் இன்னும் முழுமையாக என்னால் அடைய முடியவில்லை.

தமிழ்நாட்டில் ஆட்சி என்ற இலக்கை எட்டுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? இந்த வினாதான் என்னை வாட்டிக் கொண்டிருக்கிறது என்ற வாசகத்தைக் குறிப்பிட்டு, தனது கனவு இன்னும் நனவாக இல்லையே என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளது அரசியல் அரங்கில் மீண்டும் அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது.

1989 இல் பாமகவைத் தொடங்கி, கடந்த 44 ஆண்டுகளாக தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக மாற்றியிருப்பது மிகப்பெரிய விஷயம்தான். அரசியல் சுழலுக்குள் சிக்கிக்கொள்ளாமல், காலவெள்ளத்தில் கரைந்து போகாமல், இப்போதும் துடிப்புடன் எதிர்நீச்சல் அடிக்க முடிகிறது என்றால் ராமதாஸிடம் இருக்கும் மன உறுதி, களச்சூழலைப் பார்த்து அரசியல் முடிவெடுக்கும் திறன் உள்ளிட்ட தனித்திறன்கள்தான் காரணம்.

கட்சி தொடங்கியபின் 1989 பேரவைத் தேர்தலில் தேர்தல் புறக்கணிப்பு போராட்டத்தை மிகவும் வெற்றிகரமாக நடத்திக்காட்டிய ராமதாஸ், 1989 மக்களவைத் தேர்தலில் ஒரு தொகுதியில்கூட வெற்றி பெற முடியாவிட்டாலும் 6 சதவீத வாக்குகளைப் பெற்று பாமகவை அரசியல் சக்தியாக நிலைநிறுத்தினார்.

தொடர்ந்து 1991இல் தனித்தும், 1996இல் வாழப்பாடி ராமதாஸ் தலைமையிலான ராஜிவ் காங்கிரஸுடன் கூட்டணியாக களம் இறங்கினாலும் தனது அடிப்படை வாக்கு வங்கியை பாமக இழக்கவில்லை.

1998 மக்களவைத் தேர்தலில் முதல்முறையாக அதிமுக, பின்னர் 1999இல் திமுக எனக் கூட்டணி அமைத்து மத்திய அமைச்சரவையிலும் அங்கம் வகித்தது. 2001 பேரவைத் தேர்தலில் மீண்டும் அதிமுக, 2004 மக்களவைத் தேர்தலில் திமுக, 2006 பேரவைத் தேர்தலில் திமுக, 2009 மக்களவைத் தேர்தலில் அதிமுக, 2011 பேரவைத் தேர்தலில் திமுக எனத் தொடர்ந்து கூட்டணி வியூகத்தை மாற்றியது பாமக. இருப்பினும், 1998 முதல் 2006 வரை பாமக அங்கம் வகிக்கும் அணியே வெற்றி பெற்ற நிலையில், 2009 முதல் அந்த நிலை மாறியது.

2009 மக்களவைத் தேர்தல், 2011 பேரவைத் தேர்தல் ஆகியவற்றில் சறுக்கிய பாமக, 2014இல் பாமக, தேமுதிக, மதிமுக எனத் தனி அணியைக் கட்டியபோதும், 2016 பேரவைத் தேர்தலில் தனித்துக் களம் கண்டபோதும் சாதிக்க முடியவில்லை.

மீண்டும் அதிமுக கூட்டணியில் 2019 முதல் சேர்ந்தபோதும் மக்களவை, பேரவைத் தேர்தல்களில் பாமகவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. விடுபட்ட ஊரக உள்ளாட்சி, நகர்புற உள்ளாட்சித் தேர்தல் ஆகியவற்றில் தனித்துக் களம் கண்டபோதும் பாமகவால் வெற்றி வளையத்துக்குள் இதுவரை நுழைய முடியவில்லை. இந்நிலையில், 2024 மக்களவைத் தேர்தலில் கூட்டணி, 2026 பேரவைத் தேர்தலில் பாமக தலைமையில் கூட்டணி ஆட்சி என்ற இலக்குடன் பயணித்து வருகிறது பாமக. பிரதமர் மோடி தலைமையில் நடந்த தேசிய ஜனநாயக் கூட்டணி கூட்டத்துக்கு அன்புமணியை அனுப்பாமல் முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே. மூர்த்தியை அனுப்பிவைத்திருக்கிறார் ராமதாஸ்.

ராமதாஸ் தனது 44 ஆண்டுகால அரசியல் பயணத்தில், முதலில் தனித்து, பின்னர் கூட்டணி, மீண்டும் தனித்து, தொடர்ந்து கூட்டணி என 4 வகையான முடிவுகளை எடுத்திருக்கிறார். இப்போதும்கூட 2024இல் கூட்டணி, 2026இல் தனித்து என்ற இரட்டை நிலைப்பாட்டுடன்தான் பாமக பயணிக்கிறது. இந்த இரட்டை நிலைப்பாடுதான் பாமகவின் மீதான நம்பகத்தன்மையை மக்களிடம் குறைக்கிறது.

2016இல் தனித்துப் போட்டியிட்ட பாமக தொடர்ந்து அதே நிலைப்பாட்டில் இருந்திருந்தால் ஜெயலலிதா, கருணாநிதி மறைவுக்குப்பின் அன்புமணியை முன்னிறுத்தி அதன் வாக்கு வங்கியை மேலும் உயர்த்தியிருக்கலாம். பாமக தலைமையில் கூட்டணி என்ற நிலையை உருவாக்கியிருக்கலாம்.

அதே காலகட்டத்தில் 2016இல் 1.1 சதவீத வாக்குகளைப் பெற்ற சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, தனித்துப் போட்டி என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் நின்றதால், 2019 மக்களவைத் தேர்தலில் 3.9 சதவீத வாக்குகளையும், 2021 பேரவைத் தேர்தலில் 6.85 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளது. 2024, 2026 ஆகிய தேர்தல்களிலும் தனித்துத்தான் என்ற உறுதியான அறிவிப்பை நாம் தமிழர் கட்சி வெளியிட்டு தொடர்ந்து களத்தில் இயங்கி வருவது இளம் வாக்காளர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாக திமுக, அதிமுகவை விரும்பாதவர்களின் வாக்குகள் நாம் தமிழர் கட்சிக்குத் தானாக விழுகிறது.

இதே உத்தியை பாமக கடைபிடித்திருந்தால் இப்போது இரட்டை இலக்கு வாக்கு வங்கியைத் தொட்டிருக்க முடியும்.

2021 பேரவைத் தேர்தலில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு கொடுத்ததால், 23 இடங்களை ஒத்துக்கொண்ட பாமக, தேர்தலில் 3.8 சதவீத வாக்குகளையே பெற்றது தேர்தல் வரலாற்றிலேயே குறைவு. 7 தொகுதிகள் வெற்றி பெறாததால் மாநிலக் கட்சி அங்கீகாரமும் கிடைக்கவில்லை.

இதற்குப் பிறகும் திமுக கூட்டணிக்குள் செல்லும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. எதிர்கட்சியான அதிமுகவும் பெரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை. உள்ளாட்சிகள், ஈரோடு கிழக்கு தொகுதியில் கூட்டணி நீடிக்கவில்லை. இப்போது பாஜக அழைப்பு விடுத்தும் அன்புமணியை அனுப்பாமல் ஏ.கே.மூர்த்தியை அனுப்பியுள்ளனர்.

அதிமுக பாஜக கூட்டணி வடதமிழகத்தில் கடும் போட்டியைக் கொடுக்க பாமக தேவை. ராமதாஸைப் பொருத்தவரை திமுகவில் இடம் இல்லை என்பதால், அதிமுக கூட்டணியில் முக்கியத்துவம் கிடைக்குமா அல்லது பாஜகவைவிட குறைந்த இடங்கள் ஒதுக்கப்படுமா என்ற அச்சத்தில்தான் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

ராமதாஸ் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பது கேள்விக்குறிதான். வன்னியர்கள் மத்தியில் 40 சதவீத ஆதரவு உள்ளது. ஆனால், பிற சமூகத்தில் ஆதரவு இல்லை. அதனால் அதிகாரத்தில் நுழைவது கடினம்.

இரு திராவிடக் கட்சிகளுடன் இனி ஒருபோதும் கூட்டணி இல்லை என 2016 இல் முழங்கி தனித்து போட்டியிட்டுவிட்டு மீண்டும் திராவிடக் கட்சிகளுடன் கூட்டணிக்குத் தாவியது நடுநிலை வாக்காளர்கள் மத்தியில் பாமகவின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

2026 இல் மீண்டும் பாமக தலைமையில் ஆட்சி என்ற இலக்கை பாமக நிர்ணயம் செய்தாலும் தொடர்ந்து தனித்துப் போட்டி என்பதில் அக்கட்சி உறுதியாக இருக்குமா என்ற நடுநிலை வாக்காளர்களின் அவநம்பிக்கையை அன்புமணி ராமதாஸ் எப்படி களையப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பாமக தொடங்கிய பின்னர் உருவாகி 5 சதவீத வாக்கு வங்கிக்குமேல் பெற்றிருந்த மூப்பனார் தலைமையிலான தமாகா, விஜயகாந்த் தலைமையிலான தேமுதிக, வைகோ தலைமையிலான மதிமுக ஆகியவை கால வெள்ளத்தில் கரைந்து நிற்கின்றன. ஆனால், தொடர்ந்து 5 சதவீத வாக்கு வங்கியை 30 ஆண்டுகளாக பாமக வைத்திருந்த நிலையில், கடந்த பேரவைத் தேர்தலில் மட்டும் 3.8 சதவீதமாக சுருங்கியது. இருப்பினும் அரசியல் சக்தி என்ற அந்தஸ்தை இதுவரை இழக்காமல் இருப்பது பாமகவின் பலமாக உள்ளது.

ஒவ்வொரு முறையும் பாமக பின்னடைவை சந்திக்கும்போது மீண்டும் வாக்கு வங்கியைப் பலப்படுத்த ஜாதி அரசியலைக் கையில் எடுக்கிறது என்ற விமர்சனமும் அக்கட்சி மீது உள்ளது. எனவே, மீண்டும் பின்னடைவு ஏற்பட்டால், ஜாதி அரசியலுக்குள் பாமக செல்லாது என்ற எண்ணத்தை பாமக உருவாக்க வேண்டிய கட்டாய சூழலில் உள்ளது.

வடதமிழகத்தில் 30 சதவீத வன்னியர்களின் வாக்கு வங்கியை மட்டுமே பிரதானமாக நம்பியிருக்கும் பாமக, அரசியல் களத்தில் தனக்கு நேர் எதிராகத் திரும்பும் 30 சதவீத ஆதிதிராவிடர்கள், 30 சதவீத பிற்பட்டோர் சமூக வாக்குகளை சமாதானப்படுத்துவதற்கான முன்முயற்சிகளை எடுக்காவிட்டால் 2026இல் ஆட்சியைப் பிடிப்பது பகல் கனவாகவே மாறிவிடும்.

திமுகவை வன்னியர்கள் தங்களது கட்சியாக பார்த்ததுபோல அதிமுகவை இப்போது பார்க்கின்றனர். கருணாநிதி, வீரபாண்டி ஆறுமுகத்துடன் போட்டிபோட்டதுபோல இப்போது எடப்பாடி பழனிசாமி, சி.வி.சண்முகத்துடன் போட்டியிட வேண்டிய சூழல் ராமதாஸுக்கு உருவாகியுள்ளது.

தொடர்ந்து அதிமுகவுடன் கூட்டணி வைத்தால் ராமதாஸின் வாக்குகள் அதிமுகவில் தங்குவதற்கு வாய்ப்புள்ளது. இதன் காரணமாகத்தான் 2026இல் தனித்து ஆட்சி என்ற கோஷத்தை இப்போதே முன்வைக்கின்றனர். கே.சந்திரசேகரராவ் ஒட்டுமொத்த ஆந்திராவில் 4 சதவீத வாக்குகள் மட்டும் வைத்திருந்த நிலையில், மாநிலப் பிரிப்பு என்பதை வலியுறுத்தியதால் வாக்கு வங்கி 13 சதவீதமாக மாறியது. அதுவும் 119 தொகுதிகள் கொண்ட இடத்தில் 40 தொகுதிகளில் அந்த சதவீதம் வந்தது. அதேபோல, ஒட்டுமொத்த தமிழகத்தில் பெரும்பாலான வன்னியர்கள், அதிமுகவிலேயே ஐக்கியமாக வாய்ப்புள்ள நிலையில், மாநிலம் பிரிந்தால் மட்டுமே பாமகவிடம் அவர்கள் மீண்டும் திரண்டுவர வாய்ப்பு உருவாகும்.

அப்போது, வடதமிழகத்தில் உள்ள 100 தொகுதிகளில் முதல் வாக்கு வங்கியுள்ள கட்சி அல்லது இரண்டாவது கட்சியாக மாறும் அல்லது கூட்டணி ஆட்சியாவது அமைக்கலாம். 2024 மக்களவைத் தேர்தலில் தனது வாக்கு வங்கியைப் பிற கட்சியிடம் இழக்காமல், தனது வெற்றியையும் பெற வேண்டிய நிலையில் ராமதாஸ் உள்ளார். அப்போதுதான் பாமக மற்றும் அன்புமணியின் அரசியல் எதிர்காலம் தெளிவாகும்.

2024 மக்களவைத் தேர்தலில் எப்படிப்பட்ட கூட்டணி போகிறார், எதை மையமாக வைத்து பேரவைத் தேர்தலை சந்திக்கப் போகிறார் என்பதை வைத்தும் எதிர்காலம் முடிவாகும். கூட்டணி அரசியலில் கடந்த 15 ஆண்டுகளாக சாதிக்க முடியவில்லை.

எனவே, பலமுனைப் போட்டி உருவானால்தான் அவரால் ஏதாவது சாதிக்க முடியும். இதையும் மையமாக வைத்துத்தான் பாமக தனது எதிர்கால முடிவை எடுக்க முடியும். 2024 இல் எடுக்கும் முடிவைப்] பொருத்துத்தான் பிறந்த நாளை சந்தோஷமாகக் கொண்டாட முடியும்.

**தொடர்ந்து 5 சதவீத வாக்கு வங்கியை 30 ஆண்டுகளாக வைத்திருந்தது. கடந்த பேரவைத் தேர்தலில் மட்டுமே பாமகவின் வாக்கு வங்கி 3.8 சதவீதமாக சுருங்கியது. இருப்பினும் அரசியல் சக்தி என்ற அந்தஸ்தை இதுவரை இழக்காமல் இருப்பது பாமகவின் பலமாக உள்ளது. ஒவ்வொரு முறையும் பாமக பின்னடைவை சந்திக்கும்போது மீண்டும் வாக்கு வங்கியை பலப்படுத்த ஜாதி அரசியலை கையில் எடுக்கிறது என்ற விமர்சனம் உள்ளது. மீண்டும் பின்னடைவு ஏற்பட்டால், ஜாதி அரசியலுக்கு பாமக செல்லாது என்ற எண்ணத்தை பாமக உருவாக்க வேண்டிய கட்டாய சூழலில் உள்ளது. ”**

## 2024ல் மீண்டும் பாஜக ஆட்சிக்கு வந்தால், வாய்ப்பு உண்டு

இதுகுறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, ‘பாஜகவைப் பொருத்தவரை பெரிய மாநிலங்களை சிறு மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும். அதுதான் நிர்வாக வசதிக்கு வசதியாக இருக்கும் என்பதுதான் அவர்களது திட்டம். ஒரு மாநிலத்தைப் பிரிப்பதற்கு அரசியல் ரீதியாக மிகப்பெரிய எதிர்ப்பு வரும் என்பதால் அதை செயல்படுத்த மத்திய ஆளும் கட்சி தீவிரமாக ஆலோசித்துதான் முடிவு செய்யும்.

ஒன்றுபட்ட தமிழகத்தில் பாஜக வாக்கு வங்கியை வலுப்படுத்தி ஆட்சியைப் பிடிப்பது என்பது குதிரைக்கொம்பான விஷயம். எனவே, தமிழகத்தை மூன்றாகப் பிரிப்பதால் பாஜகவுக்கு லாபம் கிடைக்குமேதவிர, நஷ்டம் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே, மூன்றாவது முறையாக 2024 இல் மீண்டும் மோடி ஆட்சியைப் பிடித்தால் தமிழகம் மூன்றாகப் பிரிக்கப்பட வாய்ப்புள்ளது.

ஏற்கெனவே, கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு கொங்கு நாடு என்று பிரிக்க வேண்டும் என்றும், தமிழகத்தின் ஒட்டுமொத்த வரி வருவாயில் கொங்கு மண்டலத்தின் பங்கு 45 சதவீதம் என்றும், ஆனால், ஒன்றுபட்ட தமிழகத்தில் கொங்கு புறக்கணிக்கப்படுகிறது என்ற கோஷம் 10 ஆண்டுகளுக்கு முன்பே எழுந்தது. ஆனால், கொங்கு மண்டலத்திற்கு ஜெயலலிதா ஆட்சியில் அமைச்சரவையில் அதிக பிரதிநிதித்துவம் அளித்தது, எடப்பாடி பழனிசாமி முதல்வராக வந்தது போன்ற அடுத்தடுத்த நிகழ்வுகளால் அந்த கோரிக்கை உயிர் பெறாமல் போய்விட்டது. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்த பிறகு மீண்டும் இந்தக் கோரிக்கையை சிலர் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

கொங்கு நாடு தனியாகப் பிரிந்தால் அங்கு கட்சியை வளர்த்தெடுக்க முடியும் என பாஜக நம்புவதால் அதற்கான சாத்தியமும் அதிகம். அப்போது வடதமிழகம், தென்தமிழகம் என மேலும் இரு மாநிலங்களும் உதயமாக வாய்ப்புகள் அதிகம்.

இந்திய அரசியலிலேயே ராமதாஸ் போன்று ஒரு சமூகத்துக்காக பணியாற்றியவர் வேறு யாரும் இல்லை. அவரால் வன்னியர்கள் அடைந்த நன்மை அளவுக்கு வேறு யாரும் அடைந்ததில்லை. அப்படிப்பட்ட பாமக தமிழகம் முழுவதும் பரவாமல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது.

அந்தக் கட்சியின் துணைத் தலைவராக இருந்த ரவீந்திரன் துரைசாமி ஆரம்ப காலகட்டத்தில் வடக்கே வன்னியரை வைத்து அரசியல் செய்ததுபோன்று, தெற்கே தேவேந்திரகுலத்தைக் கையில் எடுத்து அரசியல் செய்தால் பாமகவை வளர்க்க முடியும் என யோசனை கூறியிருந்தார். அதை ஏற்றுக்கொண்ட டாக்டர் ராமதாஸ் ஜான் பாண்டியன், பசுபதி பாண்டியன், இரும்புரை குணசேகரன் போன்றவர்களைக் கட்சியில் வளர்த்தார்.

ஆனால், பாமக கூட்டணி அரசியலுக்குச் சென்ற பிறகு அந்த வியூகம் கைகூடவில்லை. தற்பொழுது முழுமையாக வன்னியர்களுக்கென்று தனி மாநிலம் எனும் கோரிக்கையை வைத்துச் செல்வதே பாமகவின் எதிர்காலத்திற்கு பயனுள்ளதாக இருக்கும்’ என்றார் அவர்.

---

## ராயல் கேர் மருத்துவமனைத் தலைவருக்கு ‘வான்முகில் தொண்டர் விருது’

✍ தி கோவை மெயில்

கோவையில் ரேடியோ மிர்ச்சி பண்பலை வானொலி சார்பில் நடைபெற்ற நிகழ்வில், ராயல் கேர் மருத்துவமனைத் தலைவரும், உயிரின் சுவாசம் அறக்கட்டளையின் அறங்காவலருமான டாக்டர் கே.மாதேஸ்வரனுக்கு ’வான்முகில் தொண்டர் விருது’ வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த விருதினை அவருக்கு கோவை மாநகர் காவல்துறை ஆணையர் பாலகிருஷ்ணன் வழங்கினார்.

மேலும், 47 ராயல் கேர் மருத்துவர்களுக்கு கோவிட் காலத்தில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக ”கோவிட் வாரியர்ஸ்” விருதுகள் வழங்கப்பட்டது.

காவல்துறை ஆணையர் பேசுகையில், ‘உயிரின் சுவாசம் அறக்கட்டளை மூலம் கடந்த 100 மாதங்களில் 10 கோடி மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. பசுமை மாவட்டங்கள், இயற்கைமிகு மண்டலங்கள் உருவாக்கும் நோக்கில், இதுவரை 45 லட்சம் மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு இலவசமாகவும், பொது இடங்களில் நடவு செய்து அடர் வனங்கள் அமைத்ததற்காகவும் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது’ என்றார்.




டாக்டர்.கே.மாதேஸ்வரனுக்கு வான்முகில் தொண்டர் விருதினை வழங்குகிறார் காவல்துறை ஆணையர் பாலகிருஷ்ணன்.

## எஸ்.என்.எஸ். கலை கல்லூரியில் கருத்தரங்கம்

✍ தி கோவை மெயில்

டாக்டர் எஸ்.என்.எஸ். கலை அறிவியல் கல்லூரியில் சிறப்புக் கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது. இக்கருத்தரங்கை கல்லூரியின் தாளாளர் ராஜலக்ஷ்மி, எஸ்.என்.எஸ். கல்விக்குழுமங்களின் தலைவர் எஸ்.என்.சுப்பிரமணியன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர். கலிபோர்னியாவில் மென் பொருள் வடிவமைப்பாளராக பணிபுரியும் எஸ்.ஜார்ஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சர்வதேச ஐடி நிறுவனங்களில் தற்போதைய தொழில்நுட்பத் திறன் மேம்பாடு மற்றும் சர்வதேச வேலைவாய்ப்பு பாதைகள் என்னும் தலைப்பில் மாணவர்களிடையே உரையாற்றினார். செயற்கை நுண்ணறிவு பிரிவில் ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளதை சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் எஸ்.என்.எஸ். கல்விக் குழுமங்களில் செயலர் மற்றும் தொழில்நுட்ப இயக்குனர் எஸ்.நளின் விமல் குமார், கல்லூரியின் முதல்வர் அனிதா, துணை முதல்வர் நரேஷ் குமார், கணினி தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் கலைவாணி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

# தேவதையா? சாத்தானா?




✍ **ஆசிரியர்,** தி கோவை மெயில்

அரசாங்கம் என்பது பொதுமக்களின் நன்மைக்காகவும், நல்வாழ்வுக்காகவும் உருவான ஒரு அமைப்பாகும். உலகம் தோன்றிய காலத்தில் இருந்து உருவான அரசமைப்புகளில் இப்பொழுது உள்ள ஜனநாயகம்தான் பரவாயில்லை என்கிற இரகம் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். நாம் தினசரி வெளிப்புறத்தே காணுகின்ற அடிப்படை பொது வசதிகளான சாலை அமைப்பு, குடிதண்ணீர், மருத்துவம், இராணுவம் உள்ளிட்டவை ஒரு அரசாங்கத்தால்தான் நிறைவு செய்ய முடியும். அதற்குத் தேவையான வருமானம் என்பது மக்களின் வரிப்பணத்தின் மூலமாகத்தான் வருகிறது. இந்த வரி வசூல் என்பது வரலாற்று காலம் தொட்டு பல வகைகளிலும் இருந்து வருகிறது.

இந்தியாவின் மிகப் பழமையான ராஜநீதி என்று போற்றப்படும் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம்கூட இந்த வரி வசூல் பற்றி குறிப்பிடுகிறது. அது எப்படி என்றால் பூவிலிருந்து வண்டு தேனை எடுப்பதுபோல, பூவுக்கும் சேதம் இல்லாமல் வண்டின் பசியும் ஆறுவதுபோல மக்களிடமிருந்து வரி வசூல் செய்யப்பட வேண்டும். அவ்வாறு வசூல் செய்த பணம் மக்களின் பொது நன்மைக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

இன்றைக்கும் அதுவே மிகவும் அற்புதமான ராஜநீதி. அதற்குப்பின் பல நூற்றாண்டுகள் ஓடிவிட்டன. பின்னர் ஒவ்வொரு அரசாட்சி முறையாக, அதாவது கொடுங்கோலாட்சி, மன்னர் ஆட்சி, சர்வாதிகார ஆட்சி, பிரபு ஆட்சி என்று பல ஆட்சிகளைக் கண்ட பிறகு நாம் இன்று ஜனநாயக முறைக்கு வந்து சேர்ந்திருக்கிறோம். ஆனாலும் வரி வசூல் செய்வதும் அதை மக்கள் நன்மைக்காக பயன்படுத்துவதும் அரசாங்கத்தின் கடமை என்ற நிலையிலிருந்து மாற்றமில்லை. கூடவே வலுத்தவனுக்கு ஒரு நீதி, இளைத்தவனுக்கு ஒரு நீதி என்று பல ஓட்டைகளும் கசிவுகளும் சில இடங்களில் இருக்கத்தான் செய்கின்றன.

இந்தியா சுதந்திரம் பெற்ற கடந்த 75 ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட சட்டங்களில் ஒரு நல்ல முறையாக ஜிஎஸ்டி போற்றப்படுகிறது. பல்வேறு வகையான வரி விதிப்புகளை பல்வேறு மாநிலங்கள் கைக்கொண்டு வந்த வேளையில் மத்திய அரசுக்கு ஒரு வரி, மாநில அரசுக்கு ஒரு வரி என்று இருந்த காலகட்டத்தில் இருந்து தற்போது மாறி இருக்கிறோம்.

இன்று நாடு முழுவதும் ஒரே வரியாக கூட்ஸ் அண்ட் சர்வீஸ் டாக்ஸ் எனும் பொருட்கள் மற்றும் சேவை வரி என்று ஜி.எஸ்.டி. அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவும் தற்போதைய டிஜிட்டல் முறை வந்த பிறகு இந்த ஜி.எஸ்.டி. வரி என்பது கொண்டுவரப்பட்டது. தொடக்கத்தில் இதனை சில மாநிலங்களில் எதிர்த்தாலும் இன்று இந்த ஜிஎஸ்டி முறை என்பது பரவலாக நடைமுறைக்கு வந்துவிட்டது. இன்னும் சரியாக சொல்லப்போனால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இந்த ஜி.எஸ்.டி. வரியில் உரிமைப்பங்கும் உண்டு.

இந்த ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் இரண்டு மூன்று விதமான படிநிலைகள் இருக்கின்றன. தொடக்கத்தில் இந்த படிநிலைகள் குறித்து பெரிய விவாதங்களும் எதிர்ப்புகளும் எழுந்தன. இன்னும் அவற்றில் சீரமைக்கப்படாமலே சிலவும் இருக்கின்றன. ஒரு காலத்தில் வடநாட்டில் இருக்கின்ற கோதுமை அரைப்பதற்கான ஆட்டா சக்கி என்கிற எந்திரத்திற்கு ஒரு விதமான வரி விதிப்பும், தென்னிந்தியாவில் பயன்படுத்தப்படும் அரிசி அரைக்கும் கிரைண்டருக்கு ஒருவகை வரிவிதிப்பும் இருந்தது. அதனை எதிர்த்து இங்கே இருந்த தொழில் அமைப்புகள் குரல் கொடுத்தபொழுது அதில் கொஞ்சம் மாற்றப்பட்டது. இவ்வாறு ஆங்காங்கே சில மாற்றங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

எப்பொழுதுமே சட்டம் என்பது மக்கள் அனைவருக்கும் பொதுவானதுதான் என்றாலும் அதை நடைமுறைப்படுத்துபவர்கள் அதிகாரிகள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் பெரும்பாலான அதிகாரிகள் மனதில் சட்டம் என்பது மக்களுக்காகத்தான் என்ற மனநிலை இருப்பதில்லை. நடைமுறைப்படுத்துவதில் உள்ள அவர்களுடைய தனிப்பட்ட முடிவு எடுக்கும் திறன் மக்களை மிகவும் பாதிக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் இந்த ஜி.எஸ்.டி. கண்காணிப்பில் இருந்து யாருமே தப்பிக்க முடியாது என்ற நிலை வந்துவிட்டது. அப்படி இருக்கும்பொழுது ஜி.எஸ்.டி. நடைமுறை குறித்த சட்டங்கள் இன்னும் தெளிவாக மக்களையோ, வணிகர்களையோ, தொழில் சார்ந்த அமைப்புகளையோ, தொழில் செய்பவர்களையோ சென்றடையவில்லை என்பதுதான் உண்மை. அந்த நிலையில் இதுகுறித்த வழக்குகளையும் அதிகாரங்களையும் சரியாகப் பயன்படுத்த வேண்டியது ஜி.எஸ்.டி. துறை சார்ந்த அதிகாரிகளின் கடமையாகும்.

மேலும் ஜி.எஸ்.டி. வரி செலுத்தும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அதுகுறித்த சட்டங்களை மிகத் தெளிவாகவும் தொடர்ந்தும் அவ்வப்போது ஏற்படும் மாறுதல் குறித்தும், சொல்லித் தர வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும். சில இடங்களில் தெளிவாக இல்லாத சட்ட விதிகளை கையில் வைத்துக்கொண்டு அதிகாரிகளின் அதிகாரம் என்பது சிறிது அதிகமாகவே காணப்படுகிறது.

இன்றைய டிஜிட்டல் யுகத்தில் தொழில் செய்பவர்கள் இந்த ஜி.எஸ்.டி. வரி என்கின்ற வரம்புக்கு உள்ளே வந்துவிட்டால் பிறகு அவர்கள் அதிலிருந்து தப்பிக்கவே முடியாது என்ற நிலைதான் இருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது வரி ஏய்ப்பு என்பதற்கு இடமே இல்லை. அதனால் இதுகுறித்த வழக்குகள் வரும்பொழுது அந்த வழக்குகளை சரியாக கையாண்டு வாடிக்கையாளருக்கு சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அதிகாரிகளின் கடமை.

ஒரு சாதாரண ஹோட்டலில் உணவு உண்பவனுக்குக்கூட இந்த ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படுகிறது. இந்த வரியை வசூலித்துத் தரவேண்டிய பணியைத்தான் அந்த ஹோட்டல் செய்கிறது. அந்த நிலையில் வரி செலுத்துபவர் என்பவர் பொதுமக்கள்தான். அப்பொழுது அந்த ஹோட்டல் உரிமையாளருக்கு இதில் எந்தவிதமான பாகுபாடு காட்டவும் வழியில்லை, தேவையும் இல்லை. அந்த ஓட்டலில் இருந்து இன்னொரு இடத்துக்கு உணவு எடுத்துச் செல்லும்பொழுதோ, உணவு தயாரிப்பதற்காகவோ அல்லது வேறு காரணத்திற்காக எடுத்துச் சொல்லப்படும்போதோ, அந்த உணவுக்கு ஒரு பில் இல்லை என்பதுபோல ஒரு சிக்கல் ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். இவ்வாறு ஒரு சட்டம் சார்ந்த குழப்பம் ஏற்படும்பொழுது அதனைத் தீர்த்து வைக்க வேண்டியது அதிகாரிகளின் கடமை. அதை விடுத்து அதற்கு தண்டனை விதிப்பது என்பது தொடர்ந்து தொழில் செய்பவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும்.

நாடு தழுவிய வரி விதிப்பான ஜி.எஸ்.டி. என்பது நாட்டுக்கு மிகவும் தேவையானது என்பதில் யாருக்கும்

தொடர்ச்சி பக்கம் 8

**இன்றைய காலகட்டத்தில் இந்த ஜி.எஸ்.டி. கண்காணிப்பில் இருந்து யாருமே தப்பிக்க முடியாது என்ற நிலை வந்துவிட்டது. அப்படி இருக்கும்பொழுது ஜி.எஸ்.டி. நடைமுறை குறித்த சட்டங்கள் இன்னும் தெளிவாக மக்களையோ, வணிகர்களையோ, தொழில் சார்ந்த அமைப்புகளையோ, தொழில் செய்பவர்களையோ சென்றடையவில்லை என்பதுதான் உண்மை. அந்த நிலையில் இதுகுறித்த வழக்குகளையும் அதிகாரங்களையும் சரியாகப் பயன்படுத்த வேண்டியது ஜி.எஸ்.டி. துறை சார்ந்த அதிகாரிகளின் கடமையாகும்.**




வணிக வரித்துறையினர் வாகன சோதனையில் ஈடுபட்டபோது எடுத்தப் படம்







# சுயநலம் வேண்டும்!

தி கோவை மெயில்

சுயநலமாக இருப்பது தவறான விஷயம் என்ற பொதுவான கருத்து உள்ளது. எந்தவொன்றிற்கும் ஆசைப்படாமலும் சுயநலம் இல்லாமலும் இருப்பது ஏன் சாத்தியமில்லை என்பதை எடுத்துக்கூறி, ஒரு சங்கரன்பிள்ளை கதை மற்றும் யானை சிங்கம் கதை மூலமாக விளக்குகிறார் சத்குரு!

சத்குரு:

உங்களுக்கு ஆசை இல்லை என்றால், இந்தக் கட்டுரையின் அடுத்த வரிக்குப் பார்வையை எடுத்துப்போக முடியாது. அவ்வளவு ஏன்... நிற்க முடியாது, நடக்க முடியாது, சாப்பிட முடியாது.

'ஆசையினால் சாப்பிடுகிறேன் என்று யார் சொன்னது? பசிக்காகத்தான் சாப்பிடுகிறேன்' என்று நீங்கள் விதண்டாவாதம் செய்யலாம். நல்ல பசியான நேரத்தில் உறவினர் வீட்டுக்குப் போயிருக்கிறீர்கள். இலைபோட்டு ருசிமிக்க சாப்பாட்டைப் பரிமாறுகிறார்கள். நீங்கள் முதல் கவளத்தை வாயருகில் கொண்டுபோகும்போது, உங்களை அசிங்கமாக என்னென்னவோ ஏசுகிறார்கள். அப்போது அடுத்த கவளம் உள்ளே இறங்குமா?

பசி தீரவில்லை. ஆனால், சாப்பிடவும் முடியவில்லை. ஏன்?

ஆசையினால் செய்யாமல் அவசியத்துக்காக எதைச் செய்தாலும், அது முழுமையான சந்தோஷத்தைக் கொண்டு வராது. உங்கள் அடிப்படை இயல்பே மகிழ்ச்சியாக இருப்பதுதான். நீங்களாக வரவழைத்துக் கொண்ட துன்பங்களால்தான், அது காணாமல் போகிறது. சந்தோஷமாக இருக்க வேண்டுமானால், முதலில் நீங்கள் சுயநலத்தோடு இருக்க வேண்டும். சுயநலத்தில்கூடக் கஞ்சத்தனம் வேண்டாம். முழு சுயநலவாதியாக இருங்கள்.

ஒருமுறை சங்கரன்பிள்ளையின் மகனுக்குக் கடுமையான காய்ச்சல். டாக்டர் வந்தார். 'இது தொற்றுநோய்க் கிருமியால் வந்திருக்கும் காய்ச்சல். ஏற்கெனவே, இதை எவ்வளவு பேருக்கு உங்கள் மகன் பரப்பிவிட்டானோ? இனி, உடம்பு சரியாகும்வரைப் பள்ளிக்குப் போக வேண்டாம்' என்று எச்சரித்தார். சிகிச்சை சில நாட்களுக்குத் தொடர்ந்தது. மகனுக்கு ஒரு வழியாகக் காய்ச்சல் குறைந்து குணமாகிவிட்டான். டாக்டர் பில்லை நீட்டினார். தொகையைப் பார்த்து சங்கரன்பிள்ளை சண்டைக்குப் போய்விட்டார். டாக்டர் விளக்கம் கொடுத்தார், "ஒன்பது முறை, உங்கள் வீட்டுக்கே வந்து ஊசி போட்டிருக்கிறேன். அதுவும் விலை உயர்ந்த மருந்து!" என்றார்.

சங்கரன்பிள்ளை கொதித்தார், "விளையாடுகிறீர்களா? என் மகன் ஊரெல்லாம் காய்ச்சலைப் பரப்பியதால்தானே உங்கள் பிஸினஸ் படுஜோராகப் போய்க்கொண்டு இருக்கிறது. என்னிடம் எப்படிப் பணம் கேட்பீர்கள்? நியாயமாக நீங்கள் அல்லவா எனக்குப் பணம் தர வேண்டும்?" என்றார்.

இப்படித்தான் எது கிடைத்தாலும், அதனால் ஆதாயம் உண்டா, அதை வைத்துக்கொண்டு எப்படியாவது உலகத்துப் பணத்தையெல்லாம் சுருட்டித் தன் பாக்கெட்டில் போட்டுக்கொள்ள முடியுமா என்று பேராசை கொண்டு பலர் அலைகிறார்கள்.

அப்பேர்ப்பட்ட சுயநலத்தை நான் சொல்லவில்லை. நான் சொல்லும் சுயநலம் இன்னும் பெரிது.

இந்தச் சட்டை என்னுடையது. இந்த வீடு என்னுடையது என்ற குறுகிய சுயநலத்தை விடுங்கள். இந்த ஊர் என்னுடையது, இந்த நாடு என்னுடையது, இந்த உலகமே என்னுடையது என்று எல்லாவற்றையும் உங்களுடையதாக்கிக்கொள்ளுங்கள்.

நீங்கள் டெய்லராக இருங்கள். ஆட்டோ ஓட்டுபவராக இருங்கள். ஆபரேஷன் பண்ணும் டாக்டராக இருங்கள். காய்கறி விற்பவராக இருங்கள். கம்ப்யூட்டர் தயாரிப்பவராக இருங்கள்.

இந்த உலகமே உங்களுடையதென்று மனதார ஏற்றுக்கொண்டுவிட்டால், அதில் உள்ளவர்கள் உங்களைச் சேர்ந்தவர்களாகி விடுவார்கள். அதன்பின், அவர்களுக்காக நீங்கள் எதைச் செய்தாலும், எப்படிச் செய்வீர்கள்? உங்களுக்கே செய்துகொள்வதாக நினைத்து, மிகுந்த ஈடுபாட்டுடன், முழு அர்ப்பணிப்புடன் செய்வீர்கள் அல்லவா? அப்படி அன்போடு, ஆசையோடு செய்யும்போது அதன் தரம் எப்படி இருக்கும்? உச்சத்தில் இருக்கும். அப்புறம் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பலனை நீங்களே வேண்டாம் என்று மறுத்தாலும் அதுதானாக வந்து உங்கள் காலடியில் கொட்டும். உண்டா? இல்லையா?

எப்போதுமே நூறு சதவிகித ஈடுபாட்டுடன், சந்தோஷத்துடன் செயலாற்றுங்கள். பலன்தான் சந்தோஷம் என்று நினைக்காமல், செய்வதையே பிரியத்துடன் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். முதல்முறை வெற்றி கிடைக்கவில்லையானால், உங்களுக்குப் பிரியமானதைச் செய்ய இன்னொரு வாய்ப்பு கிடைத்ததாக நினைத்துக்கொள்ளுங்கள். மறுபடியும் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள்.

**ஆசையினால் செய்யாமல் அவசியத்துக்காக எதைச் செய்தாலும், அது முழுமையான சந்தோஷத்தைக் கொண்டு வராது. உங்கள் அடிப்படை இயல்பே மகிழ்ச்சியாக இருப்பதுதான். நீங்களாக வரவழைத்துக் கொண்ட துன்பங்களால்தான், அது காணாமல் போகிறது. சந்தோஷமாக இருக்க வேண்டுமானால், முதலில் நீங்கள் சுயநலத்தோடு இருக்க வேண்டும். சுயநலத்தில்கூடக் கஞ்சத்தனம் வேண்டாம். முழு சுயநலவாதியாக இருங்கள்.**



அப்போது ஒவ்வொரு முறையும் சந்தோஷம்தான் கிடைக்கும். வலி தெரியாது, வேதனை இருக்காது.

யோசியுங்கள்... உங்கள் திறமை முழு வீச்சில் எப்போது வெளிப்படுகிறது? நீங்கள் சந்தோஷமாக இருக்கும்போதா? படபடப்பிலும், துக்கத்திலும் இருக்கும்போதா? ஆசையோடு, சந்தோஷமாக ஒரு வேலையைச் செய்யும்போது, வெற்றி கிடைக்காமல் போவதற்கு வாய்ப்பே இல்லை.

நீங்கள் மட்டும் சந்தோஷமாக இருந்தால் போதாது. நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களால் மற்றவர்களுக்கும் சந்தோஷம் இருக்க வேண்டும். சுற்றி இருப்பவர்கள் உங்களைச் சந்தோஷத்தோடு ஏற்க வேண்டும்.

காட்டில் ஒரு சிங்கம் கால்களை வீசி கர்வத்தோடு நடந்தது. அப்போது அந்தப்பக்கம் போய்க்கொண்டிருந்த முயல் குட்டியை சட்டென்று பிடித்தது.

"ஏய், இந்தக் காட்டில் யார் ராஜா?" என்று கேட்டது. முயல்குட்டி பற்களெல்லாம் கிடுகிடுக்க, "சந்தேகமென்ன? நீங்கள்தான்" என்றது.

சிங்கம் முயலை விட்டுவிட்டு, அடுத்ததாக ஒரு நரியைத் தாவிபிடித்தது. அதே கேள்வியைக் கேட்டது.

நரி நடுக்கத்துடன், "தலைவா... உனக்கேன் இந்த சந்தேகம்? உன்னைத்தவிர, வேறு யார் இங்கே ராஜாவாக இருக்க முடியும்?"

அப்புறம் வழியில் எதிர்ப்பட்ட மிருகங்கள் எல்லாம் பணிவாக மண்டியிட்டு சிங்கத்திடம், "நீங்கள்தான் ராஜா" என்று அச்சத்தில் அலறின.

சிங்கத்துக்குப் பெருமை பிடிபடவில்லை. இன்னும் கொஞ்சம் தூரம்போனது.

அங்கே ஒரு யானை, சிங்கத்தைப் பொருட்படுத்தாமல் அது பாட்டுக்கு மரத்தில் இருந்து இலைகளைப் பறித்துக் கொண்டிருந்தது.

சிங்கம் அதன் எதிரில்போய் நின்று, "ஏய் முட்டாளே, யார் இந்த காட்டுக்கு ராஜா?" என்று கர்ஜித்தது.

யானை திரும்பியது. தும்பிக்கையால் சிங்கத்தைச் சுருட்டித் தூக்கியது. ஓங்கித் தரையில் அடித்தது.

சிங்கத்தின் முதுகெலும்பே முறிந்து போயிற்று."ஏம்ப்பா, இப்ப நான் என்னப்பா கேட்டுப்புட்டேன்? வாய் வார்த்தையாகச் சொல்லப்படாதா?" என்று வலியில் முனகியபடி கேட்டது சிங்கம்.

"இனிமேல் இந்த விஷயத்தில் உனக்குக் குழப்பமே வரக்கூடாது பார், அதற்காகத்தான்!" என்றது, யானை.

சுற்றியிருப்பவர்கள் உங்களை மகிழ்ச்சியுடன் ஏற்காவிட்டால், சிங்கத்திற்குக் கிடைத்த அனுபவம்தான் உங்களுக்கும் கிடைக்கும்.

இப்படி வேறு யாராவது உங்களுக்குக் கற்பிப்பதற்கு முன் உங்கள் வாழ்க்கையை நீங்களே இனிதாக அமைத்துக்கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள். எதைச் செய்தாலும் முழு ஆசையோடு செய்யுங்கள்!

---

கே.பி.ஆர். கல்லூரியில்

## சைபர் விழிப்புணர்வு நிகழ்ச்சி



நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து உரையாற்றுகிறார் கே.பி.ஆர். பொறியியல் கல்லூரி முதல்வர் ராமசாமி.

தி கோவை மெயில்

கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், சி20 இந்தியா, ஐ எக்ஸ்ப்ளோர் பவுன்டேசன் மற்றும் கோவை மேற்கு ரோட்டரி இணைந்து "சிவில் சமூக அமைப்புகளுக்கான தொழில்நுட்பம் மற்றும் சைபர் விழிப்புணர்வு நிகழ்ச்சி" நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் ராமசாமி துவக்கி வைத்தார். அமிர்தா ஸ்கூல் ஆஃப் பிசினஸ் கல்லூரி டீன் நவசுப்ரமணியம், கோவை மேற்கு ரோட்டரி தலைவர் துரை நாராயணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியானது, சிவில் சமூக அமைப்புகளுக்கு தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு, டிஜிட்டல் சொத்துகளைப் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, தொழில்நுட்பத்தால் இயங்கும் இன்றைய உலகில் இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

கோயம்புத்தூர், பாலக்காட்டைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக சேவை அமைப்புகளைச் சேர்ந்த மாணவர்கள், தன்னார்வலர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வை ஏற்படுத்திய சைபர் பாதுகாப்பு நிபுணரான ரத்தின பாலாஜி, பங்கேற்பாளர்களுக்கு இணைய அபாயங்களைக் குறைப்பதற்கான சிறந்த நடைமுறைகள், உத்திகள் பற்றி தெரிவித்தார்.

---

## வி.எல்.பி. கல்லூரியில் பயிற்சிப் பட்டறை




கோவைப்புதூர், வி.எல்.பி. ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உணவு மற்றும் விடுதி மேலாண்மைத் துறை சார்பாக தம்ஸ் அப் காக்டெய்ல் & மாக்டெய்ல் எனும் தலைப்பில் ஒருநாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக அல்ஹம்ரா கோல்ஃப் கிளப் உதவி பான மேலாளர் சிவ பிரசாத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் காக்டெயில் மற்றும் மாக்டெய்ல்களை உருவாக்குவது பற்றிய தகவல்களையும், பிளடி மேரிஸ், காஸ்மோ பாலிட்டன்ஸ், மோஜிடோஸ், மார்டினிஸ், ராப் ராய்ஸ் போன்ற நவீன மற்றும் உன்னதமான காக்டெயில்களை அறிமுகம் செய்து, பாட்டில் வித்தை நுட்பங்களையும் வழங்கினார்.

---

கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில்

## கல்லீரல் பரிசோதனை முகாம்



தி கோவை மெயில்

கோவை மெடிக்கல் சென்டர் கல்லீரல் மையம் நடத்தும் கல்லீரல் பிரச்னைகளுக்கான பரிசோதனை முகாம் ஜூலை 24 முதல் ஆகஸ்ட் 5 வரை நடக்கிறது.

கே.எம்.சி.ஹெச். கல்லீரல் மையம் உலகத் தரம்வாய்ந்த தொழில்நுட்பம் மற்றும் நவீன வசதிகளுடன் அனைத்து கல்லீரல் நோய்களுக்கும் சிகிச்சை அளித்திடும் வகையில் அமைக்கப் பெற்றுள்ளது. இந்த மையத்தில் இதுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கல்லீரல் அறுவை சிகிச்சைகள் மற்றும் 300க்கும் மேற்பட்ட கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முகாமில் நாள்பட்ட கல்லீரல் நோய், மஞ்சள் காமாலை, குடிப்பழக்கத்தால் ஏற்பட்ட கல்லீரல் பாதிப்புகள், கல்லீரல் சுருக்கம், கல்லீரல் மற்றும் கணைய புற்றுநோய், கல்லீரலில் கொழுப்பு படிதல், கால்கள் மற்றும் அடிவயிற்றில் வீக்கம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. அல்ட்ரா சவுண்ட் மற்றும் பைப்ரோஸ்கேன், கல்லீரல் வேலை செய்யும் விதம் பற்றிய பரிசோதனைகள், மஞ்சள் காமாலை ஹெபடைடிஸ் பி அன்ட் சி பரிசோதனைகள் போன்றவை சலுகை விலையில் செய்யப்படுகின்றன.

10,000 ரூபாய் மதிப்புள்ள இந்த பரிசோதனைகள், முகாமின் சிறப்பு சலுகையாக 1,999 ரூபாய்க்கு மேற்கொள்ளப்படுகிறது. காலை 8 மணி முதல் 10 மணி வரையில் முகாம் நடக்கிறது.

கல்லீரல் சிறப்பு சிகிச்சை மருத்துவர்கள் அரவிந்த், அருள்ராஜ் ராமகிருஷ்ணன், பாரி விஜயராகவன், சிபிதூரன், விஸ்வகுமார் ஆகியோர் முகாமில் பங்கேற்கின்றனர். மேலும் விபரங்களுக்கும், முன்பதிவிற்கும் 733 9333 485 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

முக்கியக் குறிப்பு : முகாமில் கலந்துகொள்வோர் காலை 8 மணி முதல் காலை 10 மணிக்கு வெறும் வயிற்றில் வந்து பரிசோதனைகள் செய்ய வேண்டும். பரிசோதனை முடிவுகள் கிடைப்பதற்கு 3 மணி நேரம் ஆகும். அதன்பின்பு மருத்துவரிடம் ஆலோசனை செய்துகொள்ளலாம்.

---

## வாய்ப்புகளை மாணவர்கள் பயன்படுத்த வேண்டும்

தி கோவை மெயில்

கர்னல் தினேஷ் சிங்தன்வர்




மெட்ராஸ் 110 இன்பேன்டரி பட்டாலியன் கமாண்டிங் ஆபீசர் கர்னல் தினேஷ் சிங்தன்வர், ஸ்ரீ ராமகிருஷ்ணா கலைக் கல்லூரி முதல்வர் பி.எல்.சிவக்குமார் ஆகியோருடன், மாணவர் மன்ற பொறுப்பாளர்களாக பதவியேற்றுக்கொண்ட மாணவர்கள்.

கோவை நவஇந்தியாவில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், முதுநிலை முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா மற்றும் மாணவர் மன்றத் தொடக்க விழா நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் பி.எல். சிவக்குமார் தலைமை வகித்தார். மேலாண்மைத் துறை இயக்குநர் பாமினி வரவேற்றார்.

சிறப்பு விருந்தினர் கோவை, மெட்ராஸ் 110 இன்பேன்டரி பட்டாலியன் கமாண்டிங் ஆபீசர் கர்னல் தினேஷ் சிங்தன்வர் பேசியதாவது, "முதலாமாண்டில் அடியெடுத்து வைத்துள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள். இது உங்களுடைய வாழ்க்கை. இதில் எது சரி? எது தவறு? என்று தீர்மானிக்கக் கூடிய தகுதியை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். இக்கல்லூரியின் செயல்பாடுகளில் உங்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. இது உங்களுடைய கல்லூரி. ஆசிரியர்கள் உங்களுக்கு வழிகாட்டுவார்கள். உங்கள் வெற்றிக்கான வழிகாட்டி இந்த கல்லூரியும், இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள்தான் என்பதை நீங்கள் 100 சதவீதம் நம்ப வேண்டும்.

கல்லூரி மாணவர்களுக்கு அடிப்படையில் சில கடமைகள் உள்ளன. அதற்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டும். கல்லூரியின் வளர்ச்சிக்கும் பங்களிக்க வேண்டும். அனைவரும் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன்மூலம் மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டும். உங்கள்முன் ஏராளமான சவால்கள் உள்ளன. அதில் ஒன்று, தொழில்நுட்பம். நாம்தான் தொழில்நுட்பத்தை உருவாக்கினோம். அதற்கு நாம்தான் தலைமை வகிக்க வேண்டும். மாறாக தொழில்நுட்பம் நம்மைக் கட்டுப்படுத்தும் நிலைக்குச் சென்றுவிடக் கூடாது. இராணுவத்தில் மாணவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றார்.

பின்னர் டீன்கள், இயக்குநர்கள், துறைத் தலைவர்கள் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். தொடர்ந்து மாணவர் மன்றப் பொறுப்பாளர்களுக்கு, கல்லூரி முதல்வர், பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மூன்றாமாண்டு பி.எஸ்.சி. உயிரி தொழில்நுட்பத் துறை மாணவி வர்ஷினி தலைவராகவும், மூன்றாமாண்டு பி.காம். சி.ஏ. மாணவர் நிதேஷ் கிருஷ்ணா துணைத் தலைவராகவும், இரண்டாமாண்டு பி.எஸ்சி. சி.எஸ். சி.எஸ். துறை மாணவி பிரியதர்ஷினி செயலராகவும், இரண்டாமாண்டு பி.காம். பி.ஏ. மாணவர் கே.பி. குரு குகன் இணை செயலராகவும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

# கல்லீரல் புற்றுநோய்?

## கல்லீரல் புற்றுநோய்க்கு முழுமையான சிகிச்சை தரும் கே.எம்.சி.ஹெச்.



டாக்டர் விஸ்வகுமார்

✍ தி கோவை மெயில்

கல்லீரல் புற்றுநோயை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, கல்லீரலில் உருவாவது; மற்றொன்று, மற்ற உறுப்புகளில் உருவான புற்றுநோய் கட்டி கல்லீரலுக்கு பரவுவது.

**கல்லீரல் புற்றுநோய் எதனால் உருவாகிறது?**

நமது நாட்டில் கல்லீரல் புற்றுநோய்க்கான முதல் காரணமாக சொல்லப்படுவது, ஹெபடைடிஸ் பி மற்றும் சி என்ற ஒரு வகையான நோய்த்தொற்று கிருமிகளாகும். பின்னர், சிரோசிஸ் *(cirrhosis)* என்று சொல்லப்படுகின்ற கல்லீரல் சுருக்கம், அடுத்த முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. சிரோசிஸ், மோசமான குடிப்பழக்கம் மற்றும் கட்டுப்பாடற்ற உணவுப்பழக்கம் அதனையொட்டி உருவாகின்ற சர்க்கரை நோய் மற்றும் உயர் கொலஸ்ட்ரால் போன்றவற்றால் ஏற்படுகின்றது.

**கல்லீரல் புற்றுநோய் வராமல் எப்படி தவிர்ப்பது?**

ஹெபடைடிஸ் பி அண்ட் சி கிருமிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவற்றை குணப்படுத்துதல், சிரோசிஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பில் இருத்தல் போன்ற வழிமுறைகளால் நோய் வராமல் தடுக்கவும், பாதிக்கப்பட்டால் ஆரம்ப நிலையிலேயே குணப்படுத்தவும் முடியும்.

**இந்த நோய் கண்டறிந்த பிறகு எந்தெந்த வழிகளில் இவற்றை குணப்படுத்தலாம்?**

இந்தக் கட்டியினை நவீன சி.டி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மூலம் ஆரம்ப நிலையிலேயே கண்டறிய முடியும். அவ்வாறு உறுதி செய்தபின், உடலின் மற்ற பாகங்களுக்கு பரவி உள்ளதா இல்லையா என்பதைப் பொருத்து, மேற்கொண்டு சிகிச்சை முறைகள் அமையும். நவீன மருத்துவத்தின் வரப்பிரசாதங்களான மைக்ரோவேவ் அப்லேஷன் ***(Microwave Ablation)*** (அப்லேஷன் மூலமாக புற்றுநோய் திசுக்களை அழிப்பது), ஜிகிசிணி (கேன்சர் கட்டியின் இரத்தக்குழாய்க்கு நேரடியாக மருந்து செலுத்துதல்), ஜிகிஸிணி (கேன்சர் கட்டியின் இரத்தக்குழாய் மூலம் நேரடியாக ரேடியோதெரபி கொடுத்தல்) போன்றவற்றைப் பயன்படுத்தி இக்கட்டியைக் கட்டுக்குள் கொண்டு வரலாம். இதன் பக்க விளைவுகளும் மிக மிகக் குறைவு.

**கேன்சர் மருத்துவத்தில், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையின் பங்கு என்ன?**

முதலில் கூறியதுபோல, சிரோசிஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புற்றுநோய் கட்டி வருமாயின் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பது மிகவும் சிக்கலானது. அதே சமயத்தில் இக்கட்டியை குணப்படுத்தக்கூடிய வாய்ப்பைத் தவறவிட முடியாது. அவ்வாறான மக்களுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, நோயை குணப்படுத்துவது மட்டுமின்றி நிறைந்த ஆயுளை நல்ல வாழ்க்கை தரத்துடன் அமைத்துக் கொடுக்கிறது.

இவ்வகையான நவீன சிகிச்சை முறைகள் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்க வாய்ப்பு உள்ளதா?

இந்த அனைத்து சிகிச்சை முறைகளும் நமது கோவை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில், கேஸ்ட்ரோ, ரேடியோ மற்றும் லிவர் துறையின்கீழ் சீர்பட செயல்படுகின்றது.

இதுதொடர்பான ஆலோசனைக்கு கல்லீரல் மற்றும் கணைய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் விஸ்வகுமாரை அணுகலாம். தொடர்புக்கு: *733 9333 485*

## கல்வி நிதி உதவி வழங்கிய ‘லைப்ரே பவுண்டேஷன்’

✍ தி கோவை மெயில்

கோயமுத்தூர் லைப்ரே பவுண்டேஷன் சார்பில் ஏழை மாணவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காக நலத்திட்ட உதவி வழங்கப்பட்டது.

கோயமுத்தூரை மையமாக வைத்து செயல்பட்டுவரும் இந்த லைப்ரே தன்னார்வ அமைப்பின் சார்பில் பெண்கள் முன்னேற்றம், ஏழை மாணவர்களின் கல்விக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு கல்லூரி மற்றும் பள்ளிப் படிப்புக்கு தேவையான நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நவஇந்தியா பகுதியில் உள்ள லைப்ரே அலுவலகத்தில் நடைபெற்றது.



**ஏழை மாணவி ஒருவருக்கு சான்றிதழை வழங்குகிறார் எஸ்.என். ஆர். குழுமத்தின் முதன்மை இயக்கு அலுவலர் சுவாதி ரோஹித்.**

இதில் லைப்ரே அமைப்பின் இயக்குநர் பாபி பாலச்சந்திரன், எஸ்.என்.ஆர். குழுமத்தின் முதன்மை இயக்கு அலுவலர் சுவாதி ரோஹித் ஆகியோர் 10க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ரூ.2.5 லட்சம் மதிப்பிலான நிதி உதவிகளை வழங்கினர்.

லைப்ரே அமைப்பைச் சேர்ந்த தன்னார்வலர்கள், நிதி உதவி பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

## இந்திய ஜனநாயகக் கட்சி மாநாடு

✍ தி கோவை மெயில்

இந்திய ஜனநாயகக் கட்சியின் ”கோவை மண்டல மாநாட்டை” கட்சியின் இணைப் பொது செயலாளர் லீமா ரோஸ் மார்டின் தலைமை தாங்கி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். கட்சித் தலைவர் ரவி பச்சமுத்து, பொதுச்செயலாளர் ஜெயசீலன், சிறப்பு அழைப்பாளர்களாக அதிமுக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கொறடா எஸ்.பி.வேலுமணி, பாஜக தேசிய மகளிர் அணித் தலைவரும், தெற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான வானதி சீனிவாசன், அதிமுகவைச் சேர்ந்த எம்எல்ஏக்கள் அம்மன் அர்ஜூனன், கே.ஆர். ஜெயராமன் மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்துகொண்டனர்.



## வீட்டு உபயோகப் பொருட்களின் தள்ளுபடிகளை அறிவித்தது ‘க்ரோமா’

✍ தி கோவை மெயில்

மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், க்ரோமா நிறுவனம் தனது ‘தி குட் லைஃப் ஃபெஸ்ட்’ என்ற மழைக்காலப் பிரச்சாரத்தைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது. இதில் வாஷிங் மெஷின்கள், வாட்டர் ஃப்யூரிஃபையர்கள், ஏர் ஃப்ரையர்கள், ஓடிஜி, மைக்ரோவேவ்கள், கெட்டில்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான வீட்டு உபயோகப் பொருட்களின் மீது வாடிக்கையாளர்களுக்கு ஏராளமான சலுகைகளையும் தள்ளுபடிகளையும் வெளியிட்டுள்ளது.

மேலும், ‘தி குட் லைஃப் ஃபெஸ்ட்’ பிரச்சாரத்தின் மூலம், மழைக்காலத்தில் வீட்டிற்கு வேண்டிய உபயோகப் பொருட்களின் சிறப்புப் பட்டியலை க்ரோமா அறிவித்துள்ளது.

மார்பி ஓடிஜி மீது 50 சதம் வரை தள்ளுபடி வழங்கியுள்ளது. ஹாவெல்ஸ் கெட்டிலுக்கு 48 சதவீதம் வரை தள்ளுபடி. பல்வேறு தயாரிப்புகளின் மீது கிடைக்கும் 50 சதம் வரையிலான தள்ளுபடியுடன் அத்தியாவசியமான சிறிய உணவுப் பொருட்களை வாங்கி சேமித்து வையுங்கள்.

மேலும் கூடுதலாக, கன்வெக்சன் மைக்ரோவேவ்கள், ஓடிஜிக்கள் போன்ற க்ரோமாவின் சொந்தத் தயாரிப்புகளின் மீது 30 சதம் வரையிலான அட்டகாசமான சலுகைகளை வாடிக்கையாளர்கள் பெறலாம்.அதனைத்தொடர்ந்து, க்ரோமா குட் லைஃப் ஃபெஸ்ட் விற்பனையானது, மாதம் ஒன்றுக்கு 2,071 ரூபாயில் தொடங்கி 12 மாத தவணையில், வாஷிங் மெஷின் ரகங்களை வழங்குகிறது.

காப்பர் தொழில்நுட்பம் கொண்ட ஆர்.ஓ. நீர் சுத்திகரிப்பான் தற்போது வெறும் ரூ.16,990ல் கிடைக்கிறது. மேலும் பல்வேறு வகையான ஆர்.ஓ. வாட்டர் ப்யூரிஃபையர்கள் மாதம் ஒன்றிற்கு ரூ.1210ல் தொடங்கி 12 மாத தவணைகளில் க்ரோமா ஸ்டோர்கள், க்ரோமா.காம், டாடாநியூ ஆப் ஆகியவற்றில் கிடைக்கின்றன.

க்ரோமாவில் நடைபெறும் ‘தி குட் லைஃப் பெஸ்டின்’ சலுகைகள், தள்ளுபடிகளை வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக்கொள்ள இது ஓர் அரிய வாய்ப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சேரன் போக்குவரத்து கழக அதிகாரிக்கு

## 7 ஆண்டு சிறை தண்டனை

✍ தி கோவை மெயில்

கோவையில் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய சேரன் போக்குவரத்துக் கழக அதிகாரி கோதண்டபாணி என்பவருக்கு 7 ஆண்டு சிறை தண்டனை மற்றும் 3 கோடியே 32 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து முதலாவது சார்பு நீதிமன்ற நீதிபதி சிவக்குமார் உத்தரவு வழங்கினார்.

கோவை சேரன் போக்குவரத்துக் கழகத்தில் கடந்த 1988 ம் ஆண்டு பழைய அரசுப் பேருந்துகளை ஏலத்தில் விடுவதில் மோசடி செய்து, அரசுக்கு 28 இலட்ச ரூபாய் வரை வருவாய் இழப்பு ஏற்படுத்தியதாக சிபிசிஐடி போலீஸார் அப்போதைய போக்குவரத்துக் கழக அதிகாரி கோதண்டபாணி உட்பட 8 பேர் மீது வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

கடந்த 35 ஆண்டுகளாக கோவை முதலாவது சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கில், நீதிபதி சிவக்குமார் அண்மையில் இப்படியொரு தீர்ப்பு வழங்கினார்.

# கொண்டாட்ட மனநிலையில் வனச்சுற்றுலா செல்ல வேண்டாம்

✍ தி கோவை மெயில்

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 29ஆம் தேதி, ’சர்வதேச புலிகள் தினம்’ கொண்டாடப்படுகிறது. புலிகளின் வாழ்விடப் பாதுகாப்பு மற்றும் புலிகளை வேட்டையாடுவதை தடுக்கும் வகையில் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள புலிகளின் எண்ணிக்கை மற்றும் புலிகள் கணக்கெடுப்புப் பணிகள் குறித்த பல்வேறு தகவல்களை பகிர்ந்து கொள்கிறார் ’ஓசை’ சுற்றுச்சூழல் அமைப்பைச் சேர்ந்த காளிதாசன்.

**புலிகள் தினம் எதற்காக கொண்டாடப்படுகிறது?**

